மின்னிதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM தේසියම්



WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023



குரல் - 88 | 20.06.2023 (செவ்வாய்க்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00




பக்கம் 04

# குருந்தூர்மலைக்கு கம்மன்பில வருவதால் தமிழர்கள் அஞ்சி அடங்கமாட்டார்கள்!

# தமிழ்த் தலைவர்கள் காட்டம்!!

## பதின்மூன்றை அகற்றி விட்டு சமஷ்டியைக் கொண்டு வந்தால் எனக்கும் மகிழ்ச்சிதான்! நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்



பக்கம் 04

இந்தப் பாழாய்ப்போன பதின்மூன்றை அகற்றி விட்டு, சமஷ்டியைக் கொண்டு வந்தால் எனக்கும் மகிழ்ச்சிதான். ஆனால், சமஷ்டி வரும் வரை நாடு காப்பாற்றப்பட வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## இனப்பிரச்சினைக்கான தீர்வை நான் மட்டும் வழங்க முடியாது! நழுவுகின்றார் ரணில்



பக்கம் 04

நிறைவேற்று அதிகாரம் இருக்கின்றது என்பதற்காக நான் ஆளும் தரப்பு பங்காளிகளுடனும், எதிரணியிலுள்ள கட்சிகளுடனும் கலந்து பேசாமல் எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாது. அரசியல் தீர்வு விவகாரம் சுலபமான விடயம் அல்ல. அதை ரணில் விக்ரமசிங்கவோ அல்லது சம்பந்தனோ எடுத்தவுடன் வழங்க முடியாது இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரத்தானிய மற்றும் பிரான்ஸுக்கு புறப்படுவதற்கு முன்னர்

## எமது மக்கள் இந்த மண்ணில் கௌரவமாக தலை நிமிர்ந்து வாழ வேண்டும்...! மன்னாரில் சுரேஷ் பிரேமச்சந்திரன்..!



உலகத்திலே ஈழத்தமிழர்களின் இழப்பு என்பது சொல்லில் அடங்காது. இந்த மண்ணில் பாரிய ஒரு இனப்படுகொலை நடந்து முடிந்துள்ளது.

பக்கம் 04

## தமிழர்களின் வாயில் இராணுவம் துப்பாக்கியை வைத்தால் அதனை சப்பி விழுங்குங்கள் : டக்ளஸின் கருத்தால் சலசலப்பு.!

இரணைமடு குளத்தில் வாயில் துப்பாக்கி வைத்து இராணுவம் அச்சுறுத்துவதை சினிமா பாணியில் துப்பாக்கியை சப்பி உண்டிருக்கலாம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

கிளிநொச்சி இரணைமடு குளத்தில் இழுவை மீன்பிடி முறையை கட்டுப்படுத்தி சட்ட ரீதியான மீன்பிடி முறைக்கு மட்டும் அனுமதி வழங்கல் தொடர்பான கலந்துரையாடலின்போதே அவர் இவ்விடயத்தை குறிப்பிட்டார்.

இராணுவமும் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதாகவும் கட்டுப்படுத்த முற்பட்ட மீனவர்களை மேல் வெடி வைத்தும், வாயில்



பக்கம் 04

## இந்தியா இல்லாமல் ஈழத்தமிழர்களின் பிரச்சனையை தீர்க்க முடியாது..! சிவசக்தி ஆனந்தன்..!

பக்கம் 04

## தமிழ் மக்களின் காணிகளை பறிப்பதற்கு இலங்கையின் பல திணைக்களங்கள் முயற்சி..! சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு..!

தொல்லியல் திணைக்களத்தின் ஆய்வாளர் கலாநிதி மேதானந்த எல்லாவல தேரர் “குருந்தூர் மலை காணி விகாரைக்குரியதும் சிங்கள மக்களுக்குரியதும் என“

பக்கம் 04

# தமிழரசு கட்சிக்குள் மீண்டும் குழப்பம்..!

## இடம்பெறவிருந்த கூட்டம் திடீரென ஒத்திவைப்பு..!



ஜனாதிபதியுடன் இடம் பெற்ற பேச்சு மற்றும் கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நேற்றைய தினம் இடம்பெறவிருந்த தமிழரசு கட்சியின் உயர்பீடக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டம் கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நேற்று காலை 10 மணிக்கு நடைபெறவிருந்த நிலையிலே ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் இடையிலான சந்திப்பு செயலகத்தில் இடம்பெற்றது.

அதில், அரசியல் தீர்வு மற்றும் காணி அபகரிப்பு போன்ற தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பேசப்பட்டது.

இவ்வாறான நிலையில், மீண்டும் ஜனாதிபதியுடன் சந்திப்பினை மேற்கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கு முன்னர் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய தினம் சந்தித்து ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சு மற்றும் கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கு தீர்மானித்திருந்தனர்.

எனினும், இந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தமிழரசு கட்சியின் எம்.பி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# யாழில் அமைக்கப்பட்ட கடலட்டை பண்ணைகள் வடக்கு கிழக்கில் சீனா வேரூன்றுவதற்கான வெள்ளோட்டம் ...! சுப்பிரமணியம் ஆதங்கம்...!




வடக்கு கிழக்கில், சீனா தனது ஆதிக்கத்தினை செலுத்தி வேரூன்றி நிற்பதற்கான முன்னோட்டமே யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணைகள் என அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சீன நிறுவனத்தால் வழங்கப்பட்டிருந்த கடலட்டை பண்ணைகளிற்கும் சீன நிறுவனங்களிற்கும் எந்த விதமான தொடர்புகளும் இல்லை என்ற கருத்துக்கள் கூறப்பட்டுள்ளதுடன் அது யாழ்ப்பாணத்திலே அவர்களது முதலீட்டிலே இருப்பதாக கூறப்பட்டிருந்தது. இந்த கடலட்டை பண்ணைகளினால் வடக்கு கிழக்கில் சீனாவின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதாக பலராலும் குற்றம் சுமத்தப்பட்டது. இது தொடர்பான உங்களுடைய கருத்து யாது என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கே இவ்வாறு பதிலளித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் பதிலளிக்கையில், சீன நிறுவனத்தின் வெள்ளோட்டமான செயற்பாடே இதுவாகும். அத்துடன், சீனா ஆதிக்கம் செலுத்துவதற்கும் வடகிழக்கில் வேரூன்றி நிற்பதற்கான முன்னோட்டமாக இது காணப்படுகின்றது. மக்களின் எதிர்ப்புக்களை கண்டவுடன்வேறு வேறு கதைகளை கூறி ஏமாற்றுகின்றனர். ஆயினும் இதற்கும் சீன நிறுவனத்திற்கும் முக்கியமான தொடர்பு உள்ளது.

இந்தியா எப்பொழுதும் தனது நேச நாடான இலங்கையை தனது கையிற்குள் வைத்து இருக்கவே விரும்பும். இருந்தும் இந்தியாவின் எதிரியான சீனா இலங்கைக்குள் வருவதை அந்த நாடு விரும்பாது. அவ்வாறான நிலையில், இலங்கைக்கும் இந்தியாவிற்கும் வெளிக்காட்டாவிடிலும் உள்ளே சின்ன விரிசல் காணப்படும். மோடி எமது நாட்டிலுள்ள வளங்களை பாதுகாப்பதற்கு அப்பால் எமது நாடு எம்முடைய கடல் வளங்களை பாதுகாப்பதற்கு முன்வர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# "குருதி படிந்த நிலம்" நூல் பெயரை கேட்டு விசாரணை மேற்கொண்ட புலனாய்வாளர்கள்!




முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சுதந்திரபுரத்தினை சேர்ந்த ஆசிரியரான கவிஞர் சோமையா சுதர்சனின் குருதி படிந்த நிலம் கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இதன் போது தனது குருதி படிந்த நிலம் என்ற புத்தகத்தின் செயற்பாடு தொடர்பில் தொலைபேசியில் தொடர்புகொண்ட புலனாய்வாளர்கள் தன்னிடம் பலதடவைகள் கேள்விகள் கேட்டனர். இதனால் எனது புத்தகம் வெளியீடு செய்யப்படுமாக என்ற கேள்வி என்னுள் எழுந்துள்ளது.

புலனாய்வாளர்களின் பார்வையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக எழுதப்பட்ட கவிதை தொகுப்பாக இருக்குமோ என்று அவர்களின் பார்வை இருந்திருக்கலாம்.

இந்த நிலையில் எனது படைப்பு அரங்கேறி இருக்கின்றது. இது சந்தோசமாக இருக்கின்றது என்று நூலின் ஆசிரியர் சோமையா சுதர்சன் தெரிவித்துள்ளார்.

குருதிபடிந்த நிலம் கவிதை தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு ஆசிரியர் பே.யதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.நோகராதலிங்கம், சிறப்பு விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந், கௌரவ விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி பணிப்பாளர் சி.பாஸ்கரன், முன்னால் உதவிக்கல்வி பணிப்பாளர் சி.பீதாம்பரம்,மன்னார் வலயக் கல்வி அலுவலகஉதவி கல்விப்பணிப்பாளர் க.மனோரஞ்சன், உடையார் கட்டு மகாவித்தியாலய அதிபர் வி.ஸ்ரீதரன்.சுதந்திரபுரம் தமிழ் வித்தியாலய அதிபர் செ.மேகநாதன், நட்டுவாங்க ஆசான் ஆசிரியர் ந.குமரவேல், ஆசிரியர் இராஜினி ஜோதிலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

குருதி படிந்த நிலம் கவிதைதொகுப்பிற்கான நயப்புரையினை மேனாள் உதவி விரிவுரையாளர் தமிழ்துறை யாழ் பல்கலைக்கழத்தினை சேர்ந்த முருகையா சதீஸ் அவர்கள் நிகழ்த்த ஏற்புரையினை நூலின் ஆசிரியர் சோமையா சுதர்சன் நிகழ்த்தியதை தொடர்ந்து நூல் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.நோகராதலிங்கம் அவர்களினால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நூலின் முதற்பிரதி சிறப்பு பிரதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

கவிதைத்தொகுப்பு வெளியீட்டு நிகழ்வின் போது மாணவர்களின் நடன நிகழ்வுகள் என்பன சிறப்புற நடைபெற்றுள்ளதுடன் பிரதம விருந்தினர்கள் சிறப்பு விருந்தினர்களின் உரைகளும் இடம்பெற்றுள்ளன.

# பூகோள நகர்வுகளை தமிழர் தரப்பு தந்திரோபாயமாக இதுவரை கையாளவில்லை :

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்



இலங்கைத் தீவின் அமைவு காரணமாக பூகோள அரசியல் மையங் கொண்டாலும் காலத்திற்கு காலம் அதன் வடிவங்களும் நகர்வுகளும் மாறு பட்டதாக அமைந்துள்ளது இதனை சிங்கள பிரதான கட்சிகள் கச்சிதமாக கையாழ்வதால் மாறி மாறி ஆட்சிக் கதிரைகளை பிடித்துக் கொள்கின்றனர். ஆனால் தமிழர் தரப்பு பகடைக்காய்களாக பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

காரணம் சிங்களத் தரப்பின் இராஜதந்திர நகர்வு கூட தமிழர் தரப்பிடம் இருந்திருக்கவில்லை அத்துடன் தமிழர் தரப்பு மூன்றாம் தரப்பின் தேவைகளை பூர்த்தி செய்யும் தரப்பாக தொடர்ந்து பயன்படுத்தப்பட்டதே தவிர தமிழ் மக்களின் பிரதான இலக்கை வெல்லக் கூடிய செயல் முறையை தமிழர் தரப்பு கையாள தவறிவிட்டது.

தற்போது மீண்டும் பூகோள அரசியல் இலங்கைத் தீவில் கொதி நிலை அடைந்துள்ளது அத்துடன் பிராந்திய சூழல் நெருக்கடியான நிலைக்குள் தள்ளப்பட்டு செல்கிறது இதனை சிங்கள ஆட்சியாளர்கள் தமக்கு சாதகமாக மாற்ற களத்தில் இறங்கியள்ளனர்.

ஆனால் தமிழர் தரப்பிற்கு மிக சாதகமாக பூகோள அரசியல் மாறி இருக்கிற சூழலில் புலம்பெயர் தமிழர் தரப்பும் தாயக அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து இராஜதந்திர நகர்வை முன் நகர்த்தினால் பிரதான மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

ஏற்கனவே இலங்கையில் இந்தியா, சீனா, அமெரிக்கா, காலூன்றி தமக்கான தளங்களை அமைத்துவரும் போது ரஷ்யா, யப்பான் போன்ற நாடுகளும் நகர்வுகளை ஆரம்பித்துள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் தமிழர் மீதான அடக்குமுறைகள் சர்வதேச ரீதியாக பெரும் அதிர்வலைகளை உருவாக்கி வருகின்றது அதற்கு மனிதவுரிமைப் பேரவை தீர்மானங்கள் மற்றும் கனடா பிரதமரின் இனப்படுகொலை தின அறிவிப்புக்கள் பிரித்தானிய அவுஸ்ரேலிய ராஜதந்திர நகர்வுகள் அமெரிக்க மற்றும் மேற்குலகின் இராஜதந்திர நகர்வுகளை திரட்சியாக ஒரே நிலைப்பாட்டில் தமிழர் தரப்பிற்கு சாதமாக மாற்ற முடியும் இதுவே தமிழர்களுக்கான அரசியல் அதிகாரங்களை வென்றெடுக்க வழி.

தேசிய சர்வதேச அரசியல் ராஜதந்திர நகர்வுகள் ஊடகவே தமிழின விடுதலையை தமிழர்கள் தமக்கு சாதகமாக மாற்ற முடியுமே தவிர வெறும் அறிக்கை அரசியல் ஊடாக மாற்றிவிட முடியாது.

ஆட்சித் தரப்பின் அதிகார மையத்தை மாற்றியமைப்பதோ அல்லது அமைச்சர்களை மாற்றுவதோ அமைச்சின் பணிப்பாளர்களை மாற்றுவதோ ஒருபோதும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாகாது மாறாக சிறிய இடைவேளையாக அல்லது இவ்வாறான மாற்றங்களை வைத்து சர்வதேச அழுத்தங்களில் இருந்து தற்காலிகமாக தப்புவதற்கு அரச தரப்புக்கு சாதகமாக அமையுமே தவிர பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பிற்கு பின்னடைவுதான்.

சர்வதேச பூகோள நாடுகளின் தந்திரோபாய இராஜதந்திர நகர்வுகளின் ஊடாக தமிழர்களுக்கான அரசியல் அதிகாரங்களை வென்றெடுப்பதற்கான விலையை தமிழரின் ஆயுத போராட்டமும் அகிம்சைப் போராட்டமும் கொடுத்திருக்கிறது இதனை தமிழர் தரப்புக்கள் ஒற்றுமையாக கையாள வேண்டும் அதுவே தமிழின விடுதலை.



# கஜேந்திரகுமார் கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து
# வீதிக்கு இறங்கிய மகளிர் அமைப்பு




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அவரது சகாக்கள் கைது செய்யப்பட்டு பொய் வழக்கு தொடரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு மகளிர் அமைப்புகளால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டமானது நேற்று (19.06.2023) வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக இடம்பெற்றுள்ளது.

இதன்போது, போராட்டக்காரர்கள் பொலிஸாரின் அராஜகம் ஒழிக, மருதங்கேணி பொலிஸாரே பொய் வழக்கு போடாதே, இந்த மண் எங்களின் சொந்த மண், மருதங்கேணி எங்கள் சொத்து, அபகரிக்காதே அபகரிக்காதே நிலங்களை அபகரிக்காதே, வடக்குக் கிழக்கு தமிழரின் தாயகம், உட்பட பல்வேறு கோஷங்களையும் எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் மகளிர் அமைப்புச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டதுடன் தேசிய மீனவர் துடுப்பு இயக்கத்தில் யாழ். மாவட்ட மற்றும் நினைவு இழப்பு இயக்கத்தின் மகாசபைத் தலைவரான முரளிதரன் உட்பட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மற்றும் தமிழ்த் தேசி மக்கள் முன்னணி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதை கண்டிப்பதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ். மாவாட்ட ஒத்துழைப்பு இயக்கம் கண்டித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மலையமக்கள் சுரண்டப்படும் விடயத்தினை
# சர்வதேச சமூகத்திற்கு தெரிவிப்பதற்காக
# ஜெனீவா செல்கின்றார் அமைச்சர் ஜீவன்



மலையமக்கள் சுரண்டப்படும் விடயத்தினை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வரும் நோக்கில் ஜெனீவா செல்லவுள்ளதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பேட்டியொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தேயிலை தொழில்துறையில் பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களின் சுரண்டல்களை வெளிச்சத்திற்கு கொண்டுவருவதற்காக ஜெனீவாவில் ஒக்டோபரில் இடம்பெறும் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ள அவர் தனது தலைமையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் குழு இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளும் எனவும் தெரிவித்துள்ளார்.

பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களின் சுரண்டல்களை அம்பலப்படுத்தவேண்டிய தருணம் இது என தெரிவித்துள்ள அமைச்சர் சர்வதேச தேயிலை கொள்வனவாளர்களிடம் தாங்கள் நியாயமான வர்த்தகம் மற்றும் நெறிமுறை நடைமுறைகளை கடைப்பிடிப்பதாக பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்கள் தெரிவிக்கின்ற போதிலும் உண்மையில் அவர்கள் அவ்வாறு செயற்படவில்லை என்பதை நான் அம்பலப்படுத்தப்போகின்றேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைக்கு கடும் அழுத்தம் : பரிந்துரைகளை
# நடைமுறைப்படுத்த வேண்டும்! ஐ.நா அமர்வில் ஆணையாளர்



இலங்கை ஐ.நா.வின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவேண்டும் என மனித உரிமை ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர்கள் முன்வைத்துள்ள பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்தவேண்டும் என மனித உரிமைகள் ஆணையாளர் வோல்க்கர் டேர்க் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தில் இடம்பெற்றுள்ள பொறுப்புக் கூறல் தொடர்பான அம்சங்களை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ள போதிலும் மனித உரிமை பேரவையுடன் தொடர்ந்து ஈடுபாட்டை பேணுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஐநாவின் அறிக்கையாளர்கள் பலர் கடந்த காலங்களில் விஜயம் மேற்கொண்டுள்ளனர் அவர்களின் பரிந்துரைகளை இலங்கை அதிகாரிகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பிரித்தானியாவின் உயரிய விருது பெற்ற
# ஈழத் தமிழன் பேராசிரியர் அரவிந்தன் குமாரசாமி..!



யாழ்ப்பாணம் கோப்பாய், அச்சுவேலி வளலாயை பூர்வீகமாகக் கொண்ட பேராசிரியர் அரவிந்தன் குமாரசாமி (Prof. Arri Coomarasamy) பிரித்தானியாவின் உயர் விருதுகளில் ஒன்றான OBE (Order of the British Empire) விருதை பெற்றுள்ளார்.

இந்த விருது பிரித்தானிய மன்னரின் பிறந்த நாளில் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பேராசிரியர் அரவிந்தன் குமாரசுவாமி பேர்மிங்காம் பல்கலைக் கழகத்தின் மருத்துவ மற்றும் பல் மருத்துவ அறிவியல் கல்லூரியிலும், மகளிர் மருத்துவ மற்றும் பரிசோதனை மருத்துவப் கல்லூரியிலும் மருத்துவப் பேராசிரியராகவும், பேர்மிங்காம் பெண்கள் மருத்துவமனை அறக்கட்டளையில் மகளிர் மருத்துவம், இனப்பெருக்க மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை ஆலோசகராகவும் பணியாற்றுகிறார்.

மாட்சிமை மிக்க மன்னரால் OBE விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். குறித்து birmingham women's and children's hospital (BWC) தனது உத்தியோகபூர்வ தளத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளது.

எங்கள் BWC குழுமத்தில் மிகவும் விரும்பப்படும் உறுப்பினரான பேராசிரியர் அரி. குமாரசாமி, பெண்கள் மற்றும் குடும்பங்களுக்கு உதவுவதில் தனது ஆராய்ச்சியின் மூலம் அவர் ஆற்றிய பணியைப் பாராட்டி, மாட்சிமை மிக்க மன்னரால் ழுடீநு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். என்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், பெருமிதம் கொள்கிறோம்.

நமது மகளிர் மருத்துவமனையில் பணிபுரியும் பேராசிரியர் குமாரசாமி, உலக அளவில் தாக்கத்தை ஏற்படுத்திய கருச்சிதைவு மற்றும் பிரசவத்தின் போது ஏற்படும் கடுமையான ரத்தப் போக்கு போன்றவற்றிற்கான ஆராய்ச்சியாளராக களமிறங்கி தன் சேவையை தொடர்கிறார்.

எங்கள் அறக்கட்டளையின் மகப்பேறு மருத்துவ ஆலோசகரான, பேராசிரியர் குமாரசாமி பேர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் பெண்ணோயியல் மற்றும் இனப்பெருக்க மருத்துவப் பேராசிரியராகவும், ரொமியின் கருச்சிதைவு ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தின் இயக்குநராகவும், உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய மகளிர் ஒத்துழைப்பு மையத்தின் இணை இயக்குநராகவும் உள்ளார்.

மேலும் பிரித்தானியாவில் இவரால் ஆரம்பிக்கப்பட்ட அம்மாலைஃப் என்ற தொண்டு நிறுவனம், குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் மகப்பேறு இறப்புகளைக் குறைக்கும் உலகளாவிய நோக்கத்துடன் தனது சேவையை தொடர்கிறது.

அத்துடன், பேராசிரியர் குமாரசாமி இளம் மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு வழிகாட்டுவதில் ஆர்வமாக உள்ளார், மேலும் அவரிடம் பயிற்சி பெற்ற பலர் சிறந்த மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களாக உருவாகியுள்ளனர்.

உலகெங்கிலும் உள்ள மக்களுக்கான விஷயங்களை மேம்படுத்துவதற்கான அவரது அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வம் என்பவற்றை கௌரவித்து ஜூன் 16 வெள்ளிக்கிழமை மூன்றாவது மன்னர் சார்லஸ் அவர்களின் பிறந்தநாள் மரியாதை அறிவிப்பின் ஒரு பகுதியாக அறிவிக்கப்பட்ட இந்த மதிப்புமிக்க விருது அங்கீகரிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விருது குறித்து கருத்து தெரிவித்த பேராசிரியர் குமாரசாமி, கருச்சிதைவு மற்றும் பிரசவம் தொடர்பான இறப்புகளைச் கையாள்வதில் எங்கள் ஆராய்ச்சிக் பிரிவுகள் ஆற்றிவரும் சக்திவாய்ந்த பணிக்கான அங்கீகாரமாக இது அமைந்துள்ளது..

ஒவ்வொரு இரண்டு நிமிடங்களுக்கும், உலகில் எங்காவது ஒரு தாய் பிரசவத்தின்போது இறந்துவிடுகிறார். எங்கள் ஆராய்ச்சியின் தாக்கம் தாய்மார்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கான வாழ்க்கையை உறுதிப்படுத்தவதாக அமையலாம். தாய் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியம் கொண்டாடப்படுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்
# 33வது தியாகிகள் தின நிகழ்வு..!



ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 33வது தியாகிகள் தினம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் ந. சிவசக்தி ஆனந்தன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

நேற்று (19) காலை 9.30 மணியளவில் வவுனியா நகரில் அமைந்துள்ள பத்மநாபா திருவுருவ சிலைக்கு கட்சியின் பிரமுகர்களால் மாலை அணிவிக்கும் நிகழ்வு இடம்பெற்றதுடன் பின்னர் தேக்கவத்தையில் உள்ள கட்சி காரியாலயத்தில் சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தியும் அஞ்சலி நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## குருந்தூர்மலைக்கு கம்மன்பில...

முல்லைத்தீவில் அமைந்துள்ள குருந்தூர் மலைக்கு சிங்கள கடும்போக்குவாதியான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில வருவதால் தமிழ் மக்கள் அஞ்சி ஒடுங்கமாட்டார்கள் என தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் உதய கம்மன்பில தலைமையிலான குழுவினர் நாளை (21.06.2023) புதன்கிழமை குருந்தூர்மலைக்கு வருகை தரவுள்ளனர்.

குருந்தூர் விகாரைக்கு அதிகளவான காணிகள் தொல்பொருள் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கேள்வி எழுப்பிய விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இதையடுத்து தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரும் பதவி விலகியிருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே கம்மன்பில குருந்தூர்மலைக்கு வருகை தரவுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

அவரது வருகை தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

### செல்வராசா கஜேந்திரன்

"2021 ஆம் ஆண்டு அகழ்வாராய்ச்சி முன்னெடுக்கப்படவுள்ளமையை அறிந்து நாம் போராட்டம் நடத்தினோம். கட்டுமானப் பணிகள் நடைபெறாது, வரலாற்றை ஆய்வு செய்யும் பணி மாத்திரமே நடக்கும் என்று கூறினார்கள்.

கொரோனாக் கட்டுப்பாட்டுக்காலத்தில் இராணுவத்தின் உதவியுடன் இரகசியமாக பிரமாண்டமான தாதுகோபுரம் அமைத்தார்கள். ஆதிசிவன் வழிபாடு இடம்பெற்றுவந்த அந்த இடத்திலே அகழ்வுப் பணி என கூறி அங்கிருந்த அனைத்து விக்கிரகங்களையும் அகற்றி தாது கோபுரத்தை அமைத்திருக்கின்றார்கள்.

இது சட்டவிரோதமான கட்டடம். இங்கு முரண்பாடு ஏற்பட்டு நீதிமன்றத்துக்குச் சென்று கட்டுமானங்கள் அமைக்க வேண்டாம் என்ற கட்டளையும் பெறப்பட்டுள்ளது.

தங்கள் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி 300 ஏக்கர் காணிகளை தொல்பொருள் திணைக்களம் சுவீகரித்திருக்கின்றது. எங்கள் போராட்டங்களால் அதைவிடுவிக்க நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் காணிகளை மக்களிடம் மீள ஒப்படைப்பதாக 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் வவுனியாவில் வைத்து உத்தரவிட்டிருந்தார்.

ஆனாலும் எதுவும் நடக்கவில்லை. இப்போது தொல்பொருள் திணைக்களத் தலைவரை குறைகாண்பதுபோல சில விடயங்களை ரணில் பேசியிருக்கின்றார்.

சிங்களத் தரப்பில் எதிர்ப்பு வெளியிடப்பட்டதும் மக்களிடம் காணிகளை மீள ஒப்படைக்கப் போவதில்லை என்று ரணில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டைக் கொள்ளையடித்தவர்கள் என்று மக்கள் முன்பாக செல்ல முடியாத அரசியல்வாதிகள் சிங்கள இனவாதத்தை மீண்டும் உசுப்பேத்துவதன் ஊடாக தங்கள் வாக்குகளை நிரப்ப முயல்கின்றார்கள். அதன் வெளிப்பாடே கம்மன்பிலவின் வருகை.

அவர் அங்கு செல்கின்றார் என்பதற்காக தமிழர்கள் எல்லாம் அடங்கியொடுங்கி அஞ்சி இருக்க மாட்டார்கள். தமிழர்களுடைய பூர்வீக நிலத்தில் சட்டபூர்வமற்ற முறையில் அமைக்கப்பட்டு இருக்கின்ற, தாதுகோபத்துக்கு நாங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டாமல் இருக்கப்போவதில்லை.

அவர் பார்வையிட்டு அந்த விகாரை அமைப்பு சட்டவிரோதமானது என உணர்வாராக இருந்தால் ஆரோக்கியமாக இருக்கும். இல்லை வெறிகொண்டு தமிழர்களினுடைய பூர்விக நிலத்தை ஆக்கிரமித்துவிட்டு கட்டப்பட்ட தாது கோபுரத்தை தங்களுடைய வரலாற்று பாரம்பரியம் என்று பொய்களைச் சொல்லப் போனால் அது இனங்களுக்கு இடையே இடைவெளிகளைதான் உருவாக்கும். என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

### செல்வம் அடைக்கலநாதன்

தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரிக்கின்ற செயற்பாட்டின் ஓர் அங்கம் இது. தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் தமது வாக்குகளைப் பெருக்குவதற்கு இதனைத் துருப்புச் சீட்டாக எடுத்துள்ளார்கள்.

இவர்கள் வந்து வந்து சென்று இதனை பெரிது படுத்துவதற்கு நாங்களும் அமைதியாக இருக்க முடியாது. ஏதாவது எதிர் நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும்.

இவர்களுடைய வருகை குருந்தூர்மலையைத் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்ற கள்ள நோக்கம்தான் என ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

### சுரேஷ் பிரேமச்சந்திரன்

உதய கம்மன்பில இனவாதி. இலங்கை சிங்களவருக்குரிய நாடு என்பதைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருபவர்களுள் ஒருவர்.

தேர்தல்கள் இடம்பெற இருப்பதனால் சிங்கள மக்களுக்கு படம் காட்டி பௌத்தத்தை பேணிப் பாதுகாப்பது போல சோடிப்பதற்காக அவர் வருகை தரலாம்.

முதலில் சரத் வீரசேகரவும் வந்து சென்றவர். அதேபோல் இவரும் இங்கே வந்து சென்று சிங்கள ஊடகங்களுக்கு ஏதும் சொல்லுவார்.

இனவாதத்தை கக்கி தமது வாக்கு வங்கிகளைப் பெருக்குவதற்கே இவர்கள் வருகை தருகின்றார்கள் என ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்

### துரைராசா ரவிகரன்

உதய கம்மன்பில போன்ற குழுவினர் இங்கே வந்து இனவாதத்தைக் கக்கிவிட்டு செல்வதை எங்களுடைய தமிழ்ச் சமூகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

அதிகாரத்தைப் பயன்படுத்தி இவர்கள் மீண்டும் மீண்டும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது எம்மினம் மீதான இன்னொரு இன அழிப்பாகவே நாம் பார்க்க வேண்டும்.

தமிழ் பௌத்தம், சிங்கள பௌத்தம் என பிரித்துப் பார்ப்பதற்கு முன்னரே எங்களுடைய சைவ சமயம் இங்கு இருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

தமிழ் பௌத்தம் என்று கூறி பௌத்த மதத்தை எங்களுடைய தமிழ் மக்கள் மீது திணித்து நீதிமன்றக் கட்டளைகளையும் மீறி பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

சட்டவிரோத விகாரையை ஆதரிக்கவே கம்மன்பில வருகின்றார். நாங்கள் எங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்வோம் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

### தர்மலிங்கம் சித்தார்த்தன்

குருந்தூர்மலை தொடர்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ள வரலாறு உண்மைக்குப் புறம்பானது என அங்கே வருகை தர இருக்கின்ற உதய கம்மன்பிலவுக்கும் தெரியும்.

சிங்கள மக்கள் மத்தியிலே இன ரீதியான அல்லது மத ரீதியான பிளவுகளைக் கூர்மைப்படுத்தி அதன் மூலம் தங்களுக்கு அரசியல் ஆதாயம் தேடுகின்ற செயற்பாடாகத் தான் நாம் இதனைப் பார்க்க வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் சிங்கள - தமிழ் மக்களிடையே விரிசலை இன்னும் இன்னும் ஏற்படுத்துமே தவிர முரண்பாடுகளைக் குறைக்காது. இந்தச் செயற்பாடுகளைச் செய்கின்ற உதய கம்மன்பில போன்றவர்களைக் கண்டு நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை.

இவ்வாறு செயற்படுவது நாட்டை இன்னும் அகலாதாளத்துக்குள் தள்ளுமே தவிர எந்தவித அபிவிருத்தியையும் ஏற்படுத்தாது என புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

### எஸ்.வினோநோதராதலிங்கம்

இனவாதக் கட்சியினுடைய தலைவராகக் காணப்படுகின்ற அதே தருணம் விகாரைகளுக்கு அருகாமையில் சிங்களவர்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்ற கருத்துக்களைக் கொண்ட அரசியல்வாதி உதய கம்மன்பில.

குருந்தூர்மலையைச் சூழ சிங்களவர்களை மாத்திரமே குடியேற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் அவர். அவரின் வருகை குருதிக்களரியை ஏற்படுத்தும் விடயம். எரிகின்ற விளக்கில் எண்ணெய்யை ஊற்றுவது போல் பிரச்சினைக்குரிய விடயமாக மாறி இருக்கின்ற குருந்தூர்மலைக்கு உதய கம்மன்பில வருவதானது சிங்கள மக்களை உசுப்பேத்தி அவர்களுடைய வாக்குகளைப் பெறுவதற்கே.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் குரந்தூர்மலைக்குச் செல்லும்போது பொலிஸார் பல தடைகளை விதிக்கின்றனர்.

ஆனால், தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு மாத்திரம் விசேட அனுமதி வழங்கப்படுகின்றது. அவருடைய வருகையை ஏற்க முடியாது. என ரெலோவின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

## இனப்பிரச்சினைக்கான தீர்வை...

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் பேச்சு தொடர்பில் நம்பிக்கையீனத்தை உங்களுடனான சந்திப்பின் பின்னர் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் என்ன கூறுகின்றீர்கள்" என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, "அரசியல் தீர்வு பேச்சு முன்னெடுக்கப்படும் நிலையில் ஆளும் தரப்பிலுள்ள கட்சிகளிடத்திலிருந்தும் எதிர்ப்புவரும். எதிரணியிலுள்ள கட்சிகளில் இருந்தும் எதிர்ப்புக்கள் வரும். தற்போதைய நாடாளுமன்றம் ஆளும் தரப்பிலும், எதிரணியிலும் பல கட்சிகளைக் கொண்டு அமைந்துள்ளது.

அரசியல் தீர்வு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்த மூவின மக்களுக்கும் உரியது. எனவே, தீர்வு விவகாரப் பேச்சு வெற்றியடையும் என்று நம்புகின்றேன்.

சகல கட்சிகளுடனும் நாடாளுமன்றத்துக்குள்ளும் பேசி வெளியிலும் பேசி அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை விரைந்து வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன்" என்று ரணில் குறிப்பிட்டுள்ளார்.

## பதின்மூன்றை அகற்றி விட்டு...

இது தொடர்பாக மனோ கணேசனின் முகநூல் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசமைப்பில் இருந்து 13 ஆவது திருத்தம் அகற்றப்பட வேண்டும் என வடக்கின் கட்சித் தலைவர் ஒருவர் என்னிடம் நேரடியாகச் சொன்னார்.

இதனையே சிங்கள இனவாத பிக்குகளும் கூறுகிறார்கள் என எனக்குள் ஒரு சிறிய அதிர்ச்சி உண்டானது. இது தொடர்பில் அவரிடம் கேட்ட போது, அப்போதுதான், தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஐக்கியம் வரும் என தெரிவித்திருந்தார்.

## தமிழர்களின் வாயில் இராணு...

துப்பாக்கியை வைத்தும் அச்சுறுத்தியதாக மீனவர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தை இன்றுதான் அறிய முடிவதாகவும், இவ்விடயம் தொடர்பில் படையினருக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறும், அடுத்த மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் இவ்விடயம் பேசப்பட வேண்டும் எனவும் அரச அதிபரிடம் அமைச்சர் பணித்தார்.

துப்பாக்கியை வாயில் வைத்து அச்சுறுத்திய போது சினிமாவில் நடப்பது போன்று துப்பாக்கியை சொக்கிலைட் உண்பது போல் கடித்து உண்டிருக்கலாம் என அமைச்சர் நகைச்சுவையாக தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் நீண்ட நேரம் ஆராயப்பட்டதுடன், தடை செய்யப்பட்ட தொழில் முறையை நடைமுறைப்படுத்தக் கூடாது எனவும், அது தொடர்பில் சம்மந்தப்பட்ட திணைக்களத்துடன் ஆலோசித்தே செய்ய வேண்டும் எனவும் அமைச்சர் பணித்தார்.

## எமது மக்கள் இந்த மண்ணில்...

லட்சக்கணக்கான மக்களின் உயிர்கள் பரிக்கப்பட்டுள்ளது. அந்த நிலையில் எமது மக்களின் உரிமைகள் வெற்றி பெற வேண்டும். இந்த மண்ணில் யாரும் கேள்வி கேட்க முடியாத நிலையில், நாங்கள் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவரும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

33 வது தியாகிகள் தின நினைவேந்தல் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (18) மாலை மன்னாரில் உள்ள ஈ.பி.ஆப்.எல்.எப் கட்சி அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு சுடர் ஏற்றி,மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

## தமிழ் மக்களின் காணிகளை...

சனிக்கிழமை குறிப்பிட்டிருந்தார். பல வரலாற்று ஆய்வுகள் சொல்கின்றன அங்கே தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்று இந்த வரலாற்றை இவர் முதலான தேரர்கள் படிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பூர்வீகமாக பஞ்ச ஈஸ்சரங்களை கொண்டு தமிழர்கள் வாழ்ந்தார்கள் பிரபாகரனின் கொள்கைகளை தமிழ் கட்சிகள் பின்பற்றுவதாக மேதானந்த எல்லாவல தேரர் குறிப்பிடுகின்றார்.

இவர் போன்றோர் சிங்கள மக்களை நரகத்திற்கு கொண்டு செல்லும் கரும வினைகளை செய்கின்றனர். இந்த நாட்டில் இரத்தக்களரி ஏற்படுத்துவதற்கும் மதத்தலைவர்கள் தான் காரணம் அதேவேளை பௌத்த பிக்குமார் நாட்டின் சாபக்கேடு எனவும் அவர் தெரிவித்தார்.

## இந்தியா இல்லாமல் ஈழத்தமிழ...

இந்தியா இல்லாமல் இந்தப் பிரச்சனையை தீர்க்க முடியாது என வன்னியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

பத்மநாபாவின் 33 ஆவது நினைவுதினம் நேற்று (19.06) வவுனியா நகர மத்தியில் உள்ள அவரது சிலையடியில் இடம்பெற்றதன் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப் வவுனியா அலுவலகத்தில் நடைபெற்ற அஞ்சலி உரையின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

யுத்தம் முடிந்து 14 ஆண்டுகளில் தமிழ் மக்கள் தீர்வொன்றினையோ அல்லது போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஏனைய பிரச்சனைகளோ தீர்க்கமுடியாத நிலையிலேயே தமிழ் மக்களின் நிலை உள்ளது.

இதற்கு அப்பால் ஒரு சில கட்சிகளை தவிர ஏனைய தமிழ் தேசிய கட்சிகள் மீண்டும் இந்தியாவை நாடி இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா இல்லாமல் இந்த பிரச்சனையை தீர்க்கமுடியாது என சொல்லியே நாடியிருக்கின்றது.

இந்திய பிரதமர் ஈழத்தமிழர்களின் பிரச்சனைக்கு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடு ஏற்பட்டுள்ளது. ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிர்வாகம் கூடியபோதும் முக்கியமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதாவது, 21 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி இந்திய பிரதமரை சந்திக்க உள்ளார். இந்த சந்திப்பில் ஈழத்தமிழர்களின் பிரச்சனைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வை காணவேண்டும் அதற்கும் அப்பால் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் உள்ள 13 ஆவது திருத்த சட்டத்தின் பிரகாரம் மாகாணசபைக்குள்ள முழுமையான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும், போரினால் ஏற்பட்ட பல்வேறு பிரச்சனைகளான நில ஆக்கிரமிப்பு, பௌத்த மயமாக்கல் போன்ற பல பிரச்சனைகளுக்கு இந்திய பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தத்தை பிரயோகித்து பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஏனைய தமிழ் தேசிய பரப்பில் உள்ள கட்சிகளும் இணைந்து குறித்த சந்திப்புக்கு முன்னதாக இந்திய பிரதமருக்கு ஒரு கடிதத்தை கையெழுத்திட்டு அனுப்பவேண்டும் என்ற தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
தொலைபேசி :
021 222 7557
+94 76 567 3339

# கதிர்காம காட்டுப் பாதையில் 25 ஆயிரம் அடியார்கள்



வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதையில் கடந்த எட்டு தினங்களில் சுமார் 25 ஆயிரம் அடியார்கள் பயணித்து வருகின்றனர்.
இலங்கையின் நாலா பாகங்களிலுமிருந்து இந்து பௌத்த மக்கள் சாரி சாரியாக கூட்டம் கூட்டமாக வந்து கலந்து கொண்டனர்.
கடந்த( 12) திங்கட்கிழமை காலை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்ட இப்பாதை மீண்டும் ஜூன் 25 ஆம் திகதி மூடப்படும் .
நேற்று (19) திங்கட்கிழமை எட்டாவது நாள் கொடியேற்ற தினமாகும். கதிர்காமம் முரகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் நேற்று 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 4 திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.
கடந்த வருடம் 28820 பேர் காட்டுப் பாதையில் பயணித்திருந்தனர். இம்முறை 45 ஆயிரம் பேர் அளவில் பயணிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.
அதேவேளை, உகந்தை மலை முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜூலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

வி.ரி. சகாதேவராஜா

# நோயற்றவையென உறுதிப்படுத்தப்பட்ட மாடுகளே கல்முனையில் அறுவைக்காக அனுமதிக்கப்படுகிறன் :

## கால்நடை வைத்திய அதிகாரி வட்டப்பொல தெரிவிப்பு



கல்முனை மாநகர சபை எல்லையினுள் உணவுக்காக அறுக்கப்படும் மாடுகள் நன்கு பரீட்சிக்கப்பட்டு, நோயற்ற மாடுகள் என உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படுவதாக மாநகர சபையின் கால்நடை வைத்திய அதிகாரி என்.ஏ.வட்டப்பொல தெரிவித்தார்.
இது குறித்து திங்கட்கிழமை (19) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் கூறியதாவது,
அண்மைக்காலமாக நாட்டின் சில பகுதிகளில் மாடு கள் சிலவற்றுக்கு ஒரு வகையான நோய் பரவியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில் கல்முனை மாநகர சபை எல்லையினுள் உணவுக்காக மாடுகள் அறுக்கப்படுகின்ற விடயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை கடுமையாக நடைமுறைப்படுத்தி வருகின்றோம் என்பதை அறியத் தருகின்றேன்.
குறிப்பாக விலங்கறுமனைகளுக்கு அறுவைக்காக கொண்டு வரப்படுகின்ற மாடுகள் அனைத்தும் எம்மால் நன்கு பரீட்சிக்கப்பட்டு, எவ்வித நோயும் அற்றவை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவற்றை அறுப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.
நோய்த் தொற்றுக்குள்ளான அல்லது சந்தேகத்திற்கிடமான மாடுகளை அறுப்பதற்கு எம்மால் அனுமதி வழங்கப்படுவதில்லை.
மேலும், தற்போதைய சூழ்நிலையில் மாடுகளை கொள்வனவு செய்யும்போது அவதானிக்க வேண்டிய விடயங்கள் குறித்து மாட்டிறைச்சிக் கடைக்காரர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம்.
ஆகையினால், இது விடயத்தில் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை- என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஏ.எம்.அஸ்லம்

# கிழக்கு மாகாண அமைச்சுக்களின் பதில் செயலாளர்கள் கடமையேற்பு!



கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் பதில் செயலாளராக, பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) பதவி வகித்த ஏ.மன்சூரும், கிழக்கு மாகாண முதலமைச்சின் பதில் செயலாளராக, உள்ளூராட்சி ஆணையாளராக பதவி வகித்த நாகராசா மணிவண்ணன் ஆகியோர் தங்களின் கடமைகளை நேற்று (19) பொறுப்பேற்றுக்கொண்டனர்.
கிழக்கு மாகாண அமைச்சுக்களில் நிலவி வந்த செயலாளர் பதவிகளுக்கு பதில் செயலாளர்களை நியமிப்பது தொடர்பில் பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் பரிந்துரை செய்யப்பட்டதையடுத்து, அவர்களுக்கான இந்நியமனம் வழங்கப்பட்டது.
அதற்கமைவாக, குறித்த அமைச்சுக்களுக்கு பதில் செயலாளர்களாக நியமிக்கப்பட்ட ஏ.மன்சூர் மற்றும் நாகராசா மணிவண்ணன் ஆகியோர்கள் தங்களின் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டனர்.
இந்நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், மாகாண ஆணையாளர்கள், மாகாண பணிப்பாளர்கள் உள்ளிட்ட உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.
கிழக்கு மாகாண முதலமைச்சின் பதில் செயலாளராக கடமைப்பொறுப்பேற்ற உள்ளூராட்சி ஆணையாளர் நாகராசா மணிவண்ணனை அம்பாறை மாவட்ட உதவி ஆணையாளர் உள்ளிட்ட குழுவினர் அவரை வாழ்த்தி பொன்னாடை போர்த்தி கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

அபு அலா

# கிழக்கு மாகாணத்தில் உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகளுக்கு தீர்வை

## பெற்றுக்கொடுத்த ஆளுநர் செந்தில் தொண்டமான்!



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக கிழக்கு மாகாணத்தில் உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கமதொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.
அண்மையில் உரப்பற்றாக்குறையால் தமது விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு உரிய தீர்வை பெற்றுத்தருமாறும் கிழக்கு மாகாண ஆளுநரிடம் மூன்று மாவட்ட விவசாயிகளும் கோரிக்கை முன்வைத்தனர்.
விவசாயிகள் முவைத்த கோரிக்கைக்கு அமைவாக, விரைவாக உரிய தீர்வு பெற்றுத்தரப்படுமென விவசாயிகளுக்கு வாக்குறுதியளித்திருந்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் கவனத்துக்கு இந்த விடயத்தை கொண்டுசென்றதுடன் உரப் பற்றாக்குறைக்கு தீர்வையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.
அதன் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு போதிய உரத்தை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை கமதொழில் அமைச்சு ஆரம்பித்துள்ளது.
பல காலமாக நிலுவையில் இருந்த பிரச்சினைக்கு கிழக்கு மாகாண ஆளுநரால் உடனடி தீர்வு வழங்கப்பட்டது.

கனகராசா சரவணன்

# காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய புதிய நிர்வாக சபை தெரிவு



காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய புதிய நிர்வாக சபை தெரிவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது.
தலைவராக சி இராமநாதன் செயலாளராக எம். கணேசலிங்கம் பொருளாளராக சோ. சந்திரகாந்தன் உதவித் தலைவராக கௌ. தங்கவடிவேல் உதவிச் செயலாளர் வே.விஜயராசா ஆகியோர் தெரிவானார்கள்.
மேலும் 25 நிர்வாக சபை உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட்டார்கள்.
ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு உற்சவம் எதிர்வரும் 14ஆம் தேதி ஆரம்பமாகி 24 ஆம் தேதி தீமிதிப்புடன் நிறைவடைய இருப்பது குறிப்பிடத்தக்கது.

வி.ரி. சகாதேவராஜா

# கதிர்காம கொடியேற்றத்தின்போது...



வி.ரி. சகாதேவராஜா

# அம்பாறைக்கு தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கியமை தமிழர்கள் அனாதையாக்கப்பட கூடாதென்பதே காரணம்! முன்னாள் எம்.பி. கே. கோடீஸ்வரன்



கடந்த காலத்தில் அம்பாறை மாவட்டம் அரசியல் ரீதியில் பின்தள்ளப்பட்டது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்குக் கிடைத்த ஒரேயொரு ஆசனத்தை அம்பாறை மாவட்டத்துக்கு வழங்கியமைக்கான மூல காரணம் அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ்மக்கள் அநாதைகள் ஆக்கப்படக் கூடாது, அவர்களைக் கைவிடக்கூடாது, தமிழ் மக்கள் தமக்கான பிரதிநிதியில்லாமல் அவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்ற தலைமை இல்லாமல் அநாதையாக்கப்படக் கூடாது என்பதற்காகவே. என அம்பாறை மாவட்ட மக்கள் தொடர்பில் கூட்டமைப்புக்குள்ள அக்கறை தொடர்பில் பெருமிதத்துடன் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இலங்கை மிகவும் பொருளாதார ரீதியாகப் பின்னடைவு கண்டுள்ளது. இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் ஊடக ஒலி, ஒளி பரப்பு சட்டமூலம் கொண்டுவரப்படவிருக்கின்றது. இந்த உத்தேச சட்டம் கொண்டு வரப்பட்டால் நாட்டிலுள்ள ஊடக குரல் நசுக்கப்படுகின்ற நிலை காணப்படும். உண்மையான விடயங்களை நாங்கள் வெளிக்கொண்டு வரமுடியாத சூழ்நிலை ஏற்படுத்தப்படும். இவ்வாறான விடயங்களை அரசு மேற்கொள்ளும்போது கடுமையாகப் பாதிப்புறுபவர்கள் தமிழ் மக்களே வேறு யாருமல்லர் என்பதை நான் இந்த இடத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இவ்வாறான சட்டங்களை இயற்றுகின்றபோது ஊடக சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. அவ்வாறு மறுக்கப்பட்டால் மக்களின் வாழ்வதற்கான உரிமை நசுக்கப்படுகிறது. இதனால் மக்களின் பிலச்சினைகளை வெளிக்கொண்டுவர முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுகிறது.

வடகொரியாவில் எவ்வாறு மக்கள் நசுக்கப்படுகின்றார்களோ அவர்களுக்கான வாழும் உரிமை எவ்வாறு மறுக்கப்பட்டு அவர்களின் கருத்துச் சுதந்திரம் எவ்வாறு இல்லாமலாக்கப்பட்டதோ அந்த நிலைமை இலங்கையிலும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. ஆகவே, இந்தச் சட்டமூலங்களை எதிர்க்க வேண்டிய கடப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு. அது நிச்சயம் இவற்றை எதிர்க்கும். தமிழர்களோடும், தமிழ் பண்புகளோடும்,தமிழுக்காகவும் தமிழ்த் தேசத்திற்காகவும் நாம் குரல் கொடுப்போம் என்றார்.

நூருல் ஹுதா உமர்

# மட்டு மயிலத்தமடு மேச்சல் தரையில் கன்று வயிற்றிலுள்ள பசுமாட்டை இறைச்சிக்கா அறுத்து செல்லப்பட்ட சம்பவம்

## காணி அபகரிப்பில் ஈடுபடுபவர்களால் கால்நடைகளுக்கு அச்சுறுத்தல்

மட்டக்களப்பு பொலன்னறுறை எல்லைபகுதியிலுள்ள மயிலத்தமடு மாதவனை கால்நடை மேச்சல் பகுதியில் மகாவலி கால் நிலையத்துக்கு அருகில் கன்று வயிற்றிலுள்ள பசு மாடு ஒன்றை இறைச்சிக்கா வெட்டி அறுக்கப்பட்டுள்ளதாகவும் கல்நடைகளை தொடர்ந்தும் திட்டமிட்டு அறுத்துவருவதாக கால்நடையாளர்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்

மட்டக்களப்பு மாவட்ட கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இந்த மேச்சல் தரை பகுதி ஊடாக மாகாவலி திட்டம் செயற்பட்டுவருவதால் மேச்சல் தரை காணியை சிங்களவர்கள் அத்துமீறி அபகரித்துவரும் சர்ச்சை தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றது

இந்த நிலையில் தொடர்ந்தும் அந்த பகுதிகளில் மேச்சல் தரையில் இருந்து கால்நடைகளை அகற்றுவதற்காக காணி அபகரிப்பில் ஈடுபட்டுவரும் சிங்களவர்கள் அங்கு மேச்சலில் ஈடுபட்டுவரும் மாடுகளை இறைச்சிக்காக துப்பாக்கியால் சுட்டும் மற்றும் வெட்டி அறுத்து கொண்டு செல்லும் நடவடிக்கை இடம்பெற்றுவருகின்றது.



இவ்வாறான நிலையில் நேற்று முன்தினம் காணாமல் போன பசுமாட்டை கால்நடை உரிமையாளர் தேடிச் சென்ற நிலையில் மகாவலி கால்நிலையத்துக்கு அருகில் கன்று வயிற்றிலுள்ள பசுமாட்டை இறைச்சிக்காக வெட்டி அறுத்துள்ள நிலையில் காணப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன் இந்த கன்று வயிற்றிலுள்ள மாட்டை அறுக்கம் செயலானது மிகவும் ஒரு மோசமான செயலாகும் என கால்நடையாளர்கள் கடும் கண்டணம் தெரிவித்தனர்.

அதேவேளை தேசிய பால் உற்பத்தியில் அதிகமான பங்குகளை வழங்கிவரும் மாவட்டம் மட்டக்களப்பு மாவட்டமாகும் இருந்தபோதும் இந்த செயற்பாடானது கால்நடைகளுக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது எனவே இந்த செயற்பாட்டில் ஈடுபட்வர்களை பொலிசார் கண்டுபிடித்து சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் ஜனாதிபதி மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என கால்நடையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கனகராசா சரவணன்

# 32 அணிகள் பங்கு பற்றிய பூப்பந்து சுற்றுப்போட்டியில் நண்பர்கள் பூப்பந்து அணி சாம்பியன் ஆனது.



நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலை பழைய மாணவர்களினால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்ட கட்டார் வாழ் இலங்கையர்களுக்கான இரட்டையர் பூப்பந்து சுற்று போட்டி தொடரில் நண்பர்கள் பூப்பந்து கழகம் சாம்பியன் ஆக தெரிவு செய்யப்பட்டது. இந்த போட்டியில் சஹி மற்றும் தாணு ஆகியோர் நண்பர்கள் பூப்பந்து கழகம் சார்பில் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர்.

சுற்றுத் தொடரின் ஆட்டநாயகன் விருதை சஹி தனதாக்கிக் கொண்டார்.

நூருல் ஹுதா உமர்

# இளைஞர்கள் தொழில் இன்மையால் பிழையான பாதையில் பயணித்து குற்றவாளிகளாக மாறியுள்ளனர் : இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான்.



நாடோ அதால பாதாளத்தில் சென்று நாட்டின் பொருளாதார சிக்கலினால் பல இளைஞர்கள், அரச உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள் போன்ற தொழில் வாண்மையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர், பலர் தொழில் நிலை பெற்றவர்களாக உள்ளனர், இன்னும் சிலர் போதைக்கு அடிமையாக உள்ளனர், மேலும் பலர் வறுமையால், தொழிலின்மையால் பிழையான பாதையில் பயணித்து தண்டனைக்குரிய குற்றவாளிகளாக மாறி வழக்கும் கையுமாக அலைகின்றனர். யுவதிகளுக்கான வாழ்வியல் வசதிகள் தற்போது உள்ளதா? எதுவுமே இல்லை. பல இளவயது திருமணங்களால் பல வாழ்க்கை சீரழிவுகளை யுவதிகள் அனுபவிக்கும் கால சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான் தெரிவித்தார்.

ஐந்தாவது இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தின் 3 ஆவது அமர்வு 17,18 ம் திகதிகளில் ஜனாதிபதி செயலக பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது உத்தேச இளைஞர் பாராளுமன்ற சட்டமூலம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்த உரையின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

உத்தேச இளைஞர்கள் பாராளுமன்ற சட்டமூலத்தின் பிரதான நான்கு பிரிவுகளாக தலைமைத்துவம், ஜனநாயக அமைப்பு, பாராளுமன்ற நடைமுறை, பாராளுமன்ற உறுப்புரிமை ஆகியன காணப்படுகின்றன. எனது பிராந்தியத்தில் இளைஞர்களுக்கான தலைமையாக பெரும்பான்மையான நண்பர்கள், சகோதரர்கள் ஊடாக இப்பாராளுமன்றம் வந்திருந்தேன். இப்பாராளுமன்றம் ஊடாக நன்றிக் கடன் செலுத்த முடியுமா என அலசிக் கொண்டு சென்ற போது எந்த வாய்ப்பும் பாராளுமன்றம் ஊடகவோ, இங்கிருக்கும் அமைச்சர்கள் ஊடாகவோ கிடைக்கப் பெறவில்லை. இருந்த போதிலும் இளைஞர்கள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற அந்தஸ்தினை வைத்துக் கொண்டு பல சேவைகளை உள்ளூர், வெளியூர் முதலீட்டாளர்கள் கொண்டு செவ்வனே செய்து முடிந்தளவு நன்றிக் கடன் செலுத்தியுள்ளேன் என்பதில் மனமகிழ்ச்சி.

ஜனநாயக நாட்டில் ஜனநாயக அமைப்பானது ஜனநாயக பெறுமதி, ஜனநாயக கலாச்சாரம் என்ற பிரதான அம்சங்கள் கொண்டிருந்தாலும் இந்த உயர் சபைக்கு தேசிய ஜனநாயகத்தில் என்ன கிடைத்தது என்றால் கேள்வியாகவே கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலையில் நாம் உள்ளோம். பாராளுமன்ற நடைமுறையே மக்களுக்கு தேவையானவற்றை பூர்த்தி செய்து கொள்ளும் இலகு வழி. இங்கிருந்து சட்டமூலம் உருவாக்கம், கொள்கை திட்டங்கள் உருவாக்கம் என்பன நாட்டு மக்கள், இளைஞர்கள் சார்ந்துள்ளன. இவ் உயர் சபையின் ஊடாக பல புதிய சட்டமூலங்கள், புதிய கொள்கை திட்டங்களை கடந்த காலங்களில் நாம் விவாதத்திற்கு கொண்டு வந்தோம். ஆனால் எங்களுடைய கொள்கைகள் எங்கே? சட்டமூலங்கள் எங்கே? சட்டம் வலுவாக இருந்தாலும், இளைஞர்கள் பாராளுமன்றத்தின் ஊடாக இடம்பெறும் செயற்பாடுகள் போதுமானதாக இல்லை. அதிகாரமில்லா சபையாகவே இச்சபை இயங்கி வருகின்றது. இங்கு கொண்டு வரப்படும் சட்டங்கள், கொள்கைகள் ஒவ்வொரு துறைசார் அமைச்சின் ஊடாக பாராளுமன்றத்தில் கவனத்திற் கொள்ளப்பட்டால் இங்கு பல மாற்றங்கள் கொண்டு வரமுடியும்.

தேசிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் இளைஞர்களுக்கான தொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள், கல்வி ஊக்குவிப்பு நிகழ்வுகள், போதை அழிவுகளுக்கான அறிவுறுத்தல் நிகழ்வுகள், குற்றங்களும் தண்டனைகளும் எனும் தொணியில் கருத்தரங்குகள் செய்ய இச்சபையின் இன்றைய அறிக்கையில் இணைத்து உரியவர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என சபாநாயகருக்கு ஆலோசனை வழங்குகின்றேன். நாட்டின் பொருளாதாரம் உயர்வடைய எம்மைப் போன்ற இளைஞர்கள் பிரதிநிதிகளின் ஊடாக பல நல்ல திட்டங்களை மக்கள் மயப்படுத்தி செயற்படுத்த ஆலோசனை வழங்குகின்றேன். இங்குள்ள அனைவரும் மக்கள் பிரதிநிதிகள். எனவே இன்றைய தினத்தோடு இப்பாராளுமன்றம் கலைந்தாலும் எதிர்கால இலங்கைக்கான தேசிய இளைஞர்களை ஒன்றினைக்கும் செயற்குழுவாக செயற்பட அனைவரையும் அழைக்கின்றேன். இந்த உயர்சபையில் பல உறவுகள், புது அறிமுகங்கள் கிடைத்திருந்தன. இந்த சபையில் உள்ள அனைவருக்கும் நன்றிகள், உங்கள் சேவைகளுக்கு வாழ்துக்கள் கூறுகின்றேன்.அடுதடுத்து அமையும் பாராளுமன்றம் வலுவானதாக அமைய வேண்டுமென வேண்டிக் கொள்கின்றேன்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே.மகேசன், ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்க, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் பசிந்து குணரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

நூருல் ஹுதா உமர்






இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.